# மெட்ரோ நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்



ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த இலவச மருத்துவ முகாமில் பங்கேற்றவருக்கு, பரிசோதனை மேற்கொள்ளும் டாக்டர்.

**சென்னை, பிப். 28–**

ஆலந்துார் மற்றும் அசோக் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில், இலவச மருத்துவ முகாம், நேற்று துவங்கியது.

சென்னையில், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கும்; பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், ஆலந்துார் மற்றும் அசோக் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில், நேற்று இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

எஸ்.ஆர்.எம்., மருத்துவ குழுமத்தைச் சேர்ந்த, மருத்துவ குழுவினர், 20 பேர், இரண்டு நிலையங்களிலும், பொது மருத்துவம் மற்றும் ஆலோசனை வழங்கினர்.

இந்நிலையங்களில், இன்றும், காலை, 10:00 மணி முதல், மாலை, 5:00 மணி வரை, இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. ரயில் பயணியர் மட்டுமின்றி, பொது மக்களும், இதில் பங்கேற்று பயன் பெறலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.